மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Rituals of Minor Deities in Su. Tamilselvi Novels

S. Padma

Ph.D Scholar, Subramania Bharathi School of Tamil, Pondicherry University, Puducherry, India

Manuscript ID : **MT127A0053**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 22.09.2022
Revised: 24.09.2022
Accepted: 26.09.2022
Published: 30.09.2022

Pages : 180-189

DOI: 10.5281/zenodo.7372084

ABSTRACT:

Worships arose because the human race looked closely at the workings of nature, unable to understand its fury, and acted with a sense of awe and gratitude for what it had helped. Due to the interbreeding of the people, there were changes in the worship system and minor gods and goddesses appeared. Folk deity worship is a practice carried on through tradition. In deity worship, minor deity worship may precede all forms of worship. The worship of the folk is the worship of the minor deities. In this idol worship, male deity is worshiped and female deity is worshiped. The primary deities are worshiped as well as the subsidiary deities minor deities are also worshiped as family deities for many Families. People perform various rituals to deities to alleviate their sufferings and to do good. Sacrifices, prayers, processions, offerings and festivals are performed. It clearly shows the mood of the people. There fear, love, gratitude, resistance, contentment, joy and many other thoughts and emotional states are ritually expressed.

KEYWORDS:

Minor goods, Rituals, Elegance, Companion deities, Vernacular

சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் வரும் சிறுதெய்வங்களின் சடங்கு முறைகள்

சே. பத்மா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

மனித இனம் இயற்கையின் செயல்பாடுகளைக் கூர்ந்து நோக்கி அதன் சீற்றங்களைப் புரிந்துகொள்ள இயலாத நிலையில் அச்ச உணர்வோடும் தனக்கு உதவியவற்றினை எண்ணி நன்றியுணர்வோடும் செயல்பட்டதால் வழிபாடுகள் தோன்றின. மக்களிடம் தோன்றிய இனக்கலப்பால் வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் தோன்றி சிறுதெய்வங்கள், பெருந்தெய்வங்கள் தோன்றின நாட்டுப்புறத் தெய்வவழிபாடு மரபு வழியாகக் கடைபிடிக்கப்பட்டுவரும் செயற்பாடாகும். தெய்வ வழிபாடுகளில் சிறுதெய்வ வழிபாடே எல்லா வழிபாட்டு முறைகளுக்கும் முந்தியதாய் இருக்கக் கூடும். நாட்டுப்புற மக்களின் வழிபாடானது சிறுதெய்வ வழிபாடாகும். இச்சிறு தெய்வ வழிபாட்டில் ஆண்தெய்வ வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு எனப் பிரித்து வழிபாடு செய்யப்படுகின்றன. முதன்மையானத் தெய்வங்களுக்குத் துணைமைத் தெய்வங்களான பிரிவாரத் தெய்வங்களுக்கும் வழிபாடு செய்யப்படுகின்றன. சிறுதெய்வங்கள் பல குடும்பங்களுக்குக் குலதெய்வமாகும் போற்றப்படுகின்றன. மக்கள் தங்களின் துன்பங்களைப் போக்கவும் நன்மைச் செய்யவும் சிறுதெய்வங்களுக்கு நேர்த்திக்கடனாய் பல்வேறு சடங்கு முறைகளை மேற்கொள்கின்றனர். பலியிடுதல், சாமியாடுதல், படையல் போடுதல், காணிக்கைச் செலுத்துதல், திருவிழா எடுத்தல் ஆகியவற்றைச் செய்கின்றனர். இது மக்களின் மனநிலையை வெளிப்படையாய் காட்டுகின்றன. அவர்களின் அச்சம், அன்பு, நன்றிப்பெருக்கு, எதிர்ப்பு மன நிறைவு, மகிழ்ச்சி எனப் பல எண்ணங்களும், உணர்வு நிலைகளும் சடங்கு முறையில் வெளிப்பட்டு நிற்கின்றன.

கருச்சொற்கள்

சிறுதெய்வங்கள், சடங்குகள், நேர்த்திக்கடன், பரிவாரத் தெய்வங்கள், வட்டாரப் பேச்சு

முன்னுரை

சமயம் ஒரு தத்துவம், ஒரு மதக்கோட்பாடு, ஒரு வாழ்வியல் நெறி, சமயம் பற்றிக் காந்தியடிகள் குறிப்பிடுகையில் "சமயம் இல்லாமல் மனிதம் உயிர் வாழ முடியாது" என உறுதியுடன் கூறுகின்றார். அந்தளவிற்குச் சமயம் மானிட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ, வழிகாட்டும் தன்மைக் கொண்டது. உலகில் ஒரே சமயம் என்ற நிலையில்லாமல் பலவகையான சமயங்கள் காணப்படுகின்றன. எல்லா சமயத்திற்கும் அடிப்படையாக அமைவது இறை நம்பிக்கையாகும். இயற்கையின் பேராற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன், அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க அவற்றைத் தெய்வங்களாக முதலில் வழிபடத் தொடங்கினார். இதன் அடிப்படையிலேயே இறை வழிபாடு தோற்றம் கண்டது. காலமாற்றம், பண்பாட்டு மாற்றத்தினால் தமது முன்னோர்களை வழிபடும் முறையானது தோற்றம் பெற்றது. அதன் எச்சமாகத் தத்தமது இனமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு சிறுதெய்வ வழிபாடானது மக்களிடையே தோன்றி இன்றளவும் நிலவி வருகின்றது.

தமிழர் பண்பாட்டில் இறை நம்பிகையானது, சங்க காலம் தொடங்கி இன்றளவும் பிணைந்து காணப்படுகின்றது. தமிழின் முதல் நூலாக கருதப்படும் தொல்காப்பியத்தில் "மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும்" என்னும் நூற்பாவனது ஐந்திணைக்குரிய தெய்வங்களைக் குறிப்பிடுகின்றது. தமிழ் இலக்கியங்களில் சிறந்த காப்பியமான சிலப்பதிகாரத்தில் "பிறவா யாக்கை பெரியோன்" எனச் சிவப்பெருமானைச் சுட்டுகிறது. தமிழ்க் கடவுளான முருகப் பெருமானை "முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்" எனப் பெருநாராற்றுப்படை போற்றுகின்றது. இவ்வாறு மக்கள் வாழ்வில் இறைவழிபாடு காலங்காலமாக தொடர்ந்து வருகின்றது.

சிறுதெய்வங்கள்

பழங்குடி மக்களால் தொன்றுதொட்டு வழிபட்டு வரும் தெய்வங்கள் சிறுதெய்வங்கள் ஆகும். இவை நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வமாகவும், குலத்தெய்வமாகவும் கருதப்படுகின்றன. மேலும், நோய் நீக்கி நலம் தருபவையாக, வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பவையாகக் கருதி வணங்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் பரந்துபட்ட தொடர்பில்லாமல் கிராமங்களையே இருப்பிடமாக கொண்டு நாட்டுப்புற மக்களின் மரபோடு நீங்காத உறவு கொண்டு விளங்குகின்றன. இத்தெய்வங்களை வணங்கினால் நன்மையும், வணங்காவிட்டால் தீமையும், பயப்பன என்ற ஆழ்ந்த நம்பிக்கைக் காரணமாகப் பாமர மக்களால் இவை வழிபடப்பட்டு வருகின்றன.

சடங்குகள்

மனித குலம், இனம் இனமாக வாழ்ந்து வருவதை இந்தியாவின் எல்லாம் பகுதியிலும் காணலாம். எல்லா இனமக்களின் அன்றாட வாழ்வும், பல்வேறு பட்ட சடங்குகளோடு பின்னிப் பிணைந்து கிடைக்கின்றன. பிறந்த வினாடி முதல் இறப்பு வரை அவர்களுடைய வாழ்க்கை முழுவதும், ஏதாவது ஒரு சடங்கைச் செய்து திருப்தி அடைகிறார்கள். இறைவனிடம் உள்ள அச்சமும், முன்னோர் வழக்கத்தை மீறாமல் நடந்து கொண்டால்தான் வாழ்க்கை வசதியானதாய், கவலையில்லாமல் அமையும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து சடங்குகளைச் செய்யத் தூண்டுகின்றன.

மனிதன் கருவில் இருப்பது முதல் இறப்பு வரை, பல கட்டங்களைக் கடக்கின்றான். ஒவ்வொரு கட்டத்தில் புகும்போது, அந்த நிகழ்ச்சியைக் குறிப்பதற்காகவும், அதன் சிறப்பையும், பண்பையும், பலனையும், நினைவூட்டுவதற்காவும் சில சிறப்புச் செயல்களைச் செய்யுமாறு ஒவ்வொரு இனத்தாரும் விதிகளை உண்டாக்குகின்றனர். அச்சிறப்பு செயல்கள் ‘சடங்குகள்’ எனப்படுகின்றன.

பெண் தெய்வங்கள்

இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்க காலந்தொட்டுச் செழுமையின் அடையாளமாகவும், வளமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குதற்கும், வழிபாட்டிற்கும் உரியவளானாள் பண்டையத் தமிழ் இலக்கியங்களின் பெண் தெய்வப் பெயர்களும், பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் நிறைந்து காணப்படுகின்றன.

தாய்த்தெய்வ வழிபாடு

‘அம்மன்’ என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் பெண் தெய்வங்கள், பெண்மை மற்றும் தாய்மைக் குணங்களை ஒருசேரப் பெற்றவையாக விளங்குகின்றன. தொடக்கக் காலத்தில் வளமை தொடர்பான சடங்குகள் பெண்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டதால், பின்னாளில் பெண்களே வளமையின் குறியீடாக கருதி வழிபடப்பட்டனர். இதுவே தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்வதற்குக் காரணமாய் அமைந்தது.

சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் பெண் தெய்வங்கள் மிகுதியாய் காணமுடிகின்றன. பெண் கதாபாத்திரத்திற்கு முக்கிய இடம் கொடுப்பது போலவே, பெண் தெய்வ வழிபாட்டிற்கும் அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.

மாரியம்மன்

தமிழகமெங்கும் பரவலாக மாரியம்மன் வழிபாடு காணப்படுகின்றது. மாரி - மழை மாரியம்மன் வெண்மையைப் போக்கிக் குளிர்ச்சியைத் தருபவள், மழையாகப் பொழிந்து மண்ணில் உயிர்களைக் காப்பவள் என்ற நம்பிக்கையில் மழைத் தெய்வமாக வழிபடப்படுகிறாள். சு. தமிழ்ச்செல்வி நாவல்களின் மாரியம்மன் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறாள். வண்டுரை மாரியம்மன் (மாணிக்கம்), கரைக்காத்த மாரியம்மன் (ஆறுகாட்டுத்துறை), கன்னியாக்குறிச்சி மாரியம்மன் (பொன்னாச்சரம்) எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. பொன்னாச்சரம் நாவலில் வரும் பொன்னாச்சரத்தின் தாயிக்குக் மாராணி நோய் ஏற்பட்டு, வலியால் துடிக்கிறாள். அந்நோயினைக் குணப்படுத்த வேண்டி கன்னியாங்குறிச்சி மாரியம்மனுக்கு அத்திக்காய், ஆலங்காய் எடுப்பதாக வேண்டிக் கொள்கிறாள். அதற்காக பச்சரிசிமாவு, புதுச்சட்டி, படையல் பொருட்களுடன் அத்திக்காய், ஆலங்காய் எடுக்கும் சடங்கினைச் செய்ய கன்னியாங்குறிச்சி மாரியம்மன் கோயிலுக்குச் செல்கிறாள் பொன்னாச்சரம்.

காளியம்மன்

தமிழகத்தில் மாரியம்மனுக்கு அடுத்த நிலையில் காளியம்மன் வழிபாடு பரவலாக காணப்படுகின்றது. காளி என்று வேதங்களில் குறிப்பிடப்படும் இத்தெய்வம் கோப ஆவேசம் கொண்ட தெய்வமாகக் கருதி வணங்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் பாலை நிலத்திற்குரிய தெய்வமாகச் சுட்டப்படும் கொற்றவையே ‘காளி’ என்று குறிப்படுவதுண்டு.

மாணிக்கம் நாவலில் செல்லாயிக்கு பிரசவ வலி ஏற்படுகிறது. தன்னுடன் இருக்கும் அக்காள் சரசுவிடம் வலியின் வேதனையைக் கூறுகிறாள். உடனே சரசுவும் அவளின் கணவன் சுக்குருவும் பிரசவத்திற்குத் தேவையான பொருட்களைக் தயார் நிலையில் வைத்திருந்தனர். சுக்குருவிற்குப் பயம் அதிகமானது. இதனால் காளியம்மனிடம் வேண்டிக் குழந்தை நல்லபடியாகப் பிறந்தால், வாரந்தோறும் உன் கோயிலுக்கு வந்து சூடம் ஏற்றுகிறேன் என்று வேண்டிக் கொண்டான். செல்லாயிக்குப் பிரசவம் நன்றாக முடிந்து குழந்தைப் பிறந்தது. சுக்குரு வேண்டியபடியே வேதாரண்யத்தில் இருக்கும் காளியம்மன் கோயிலுக்குச் சென்று சூடம் ஏற்றி தன் சடங்கை நிறைவேற்றினான்.

பெரியாச்சி

குலதெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாட்டில் அடங்கும். தங்கள் இனத்தைக் காக்கும் பொருட்டு குலத்தெய்வத்தை வணங்கும் மரபு தமிழர்களிடையே காணப்படுகிறது. “குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்” என்னும் பழமொழி

குலதெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகின்றது. மாணிக்கம் நாவலில் வரும் செல்லாயிக்கு முதல் பிரசவமானது தன் அக்கா சரசு வீட்டில் நல்லபடியாக நடந்தது. குழந்தைப் பிறந்தவுடன் குழந்தையைக் காக்கும் பொருட்டு தங்களின் குலதெய்வமான பெரியாச்சியை வணங்கும் சடங்கானது நிகழ்கிறது. வீட்டின் ஒரு மூலையில் சாணிப்பிள்ளையாரைப் பிடித்து அதற்கு பூவும், பொட்டும், அருகம்புல்லும் வைத்தனர். நல்ல விளக்கை ஏற்றி வைத்து வாழையிலையைப் போட்டு, அதில் காப்பரிசி, வெற்றிலைப்பாக்கு, பழம், சர்க்கரை என அனைத்தையும் வைத்தனர். குழந்தைக்கு வேப்பிலைக் காப்புகள் செய்யப்பட்டு அவையும் வைக்கப்பட்டிருந்தன, படியும் முறமும் எடுத்து வந்து கொடுத்தாள் சரசு. அதில் மாமன் முறையில் உள்ளவர்கள் குழந்தைக்குச் சீர் செய்தனர்.

பெரியாச்சிக்குப் படையல் போடப்பட்டது. அரிசிமாவால் கொழுக்கட்டைப் பிடிக்கப்பட்டது. அகல் விளக்குப்போல் உள்ளங்கை அளவிற்கு ஒன்று, அதைவிட சிறியது என்று ஐந்து தாய் கொழுக்கட்டைகள் பிடிக்கப்பட்டது. பச்சரிசி சோறு பொங்கி பத்தியப்பொடிபோட்டு கருவாட்டுக்குழம்பு வைத்து, முருங்கைக் கீரையைப் பிரட்டி வைத்தனர். அறையில் பிள்ளை பிறந்து விழுந்த இடத்தில் தாய் கொழுக்கட்டைகளைப் பெரியதிலிருந்து சிறியது வரை வரிசையாய் வைத்து திரிபோட்டு எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றினர். வாழையிலையில் கொழுக்கட்டை, பச்சரிசி சோறு, கருவாட்டுக்குழம்பு, முருங்கைக்கீரைப் பிரட்டல் எனப்படையல் போட்டனர். பெரியாச்சி முன்னால் பிறந்த குழந்தையைக் கொண்டு வந்து போட்டனர். பெரியாச்சிக்குச் சூடம் ஏற்றி குழந்தையைக் காக்கும்படி வேண்டினர், இவ்வாறு தங்கள் குலதெய்வமான பெரியாச்சியை வணங்கி குழந்தைக்குக் காப்புச் சடங்கு செய்யப்பட்டது.

ஆண்தெய்வ வழிபாடு

சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் பெண் தெய்வங்கள் மிகுதியாய் காணப்படுவதைப் போலவே ஆண்தெய்வ வழிபாடும் காணப்படுகின்றன. ஆண்தெய்வங்களில் சிலமுதன்மைத் தெய்வங்களாகவும், பலமுதன்மைத் தெய்வங்களுக்குத் துணைமைத் தெய்வங்களாவும் விளக்குகின்றன, துணைமைத் தெய்வங்களைப் 'பரிவாரத் தெய்வங்கள்' என்றும் அழைப்பர்.

முதன்மைத் தெய்வங்கள்

தனித்த கோயில்களையும், வழிபாட்டு முறைகளையும் தன்னகத்தே கொண்ட தெய்வங்களே முதன்மைத் தெய்வங்கள் என்று அழைக்கப்டுகின்றனர். இவை ஊர்த் தெய்வங்களாகவோ, குலதெய்வங்களாகவோ, காவல் தெய்வங்களாகவோ வழிபடப்படுகின்றன.

நொண்டி வீரன்

அளம் நாவலில் வரும் சுந்தராம்பாள் தன்னுடைய கணவன் சுப்பையன் வெளிநாட்டிலிருந்து விரைவில் வரவேண்டும் என்று நொண்டி வீரனை வேண்டுகிறாள். ஆடி மாதம் நொண்டி வீரனுக்கு சிறப்பு பூசைகள் போடப்படும். நொண்டி வீரனுக்கு முன்பு பெரிய மண் அகல் விளக்கு ஏற்றப்பட்டது. பெண்கள் அனைவரும் அடுப்பு மூட்டி வெண்பொங்கலும், சர்க்கரைப் பொங்கலும் ஆக்கினர். பின்பு பெரிய இலையைப் போட்டு பள்ளயம் போட்டனர். படையல் பொருட்களை எடுத்து வைத்தனர். நொண்டி வீரனுக்குச் சுருட்டும், சாரயமும் வைக்கப்பட்டது. தங்களது ஆசையை நிறைவேற்றியதற்கு நேர்த்திக்கடனாய் வீரனுக்குக் கிடாய் வெட்டி படையல் போடப்பட்டது. சுந்தராம்பாளும் தன் கணவன் விரைவில் வீடு திரும்பினால் நொண்டி வீரனுக்குக் கிடாய் வெட்டுவதாய் வேண்டிக்கொண்டாள்.

மாடஞ்சாமி

மாணிக்கம் நாவலில் வரும் தங்கதாச்சிக்கு மாடஞ்சாமிதான் குலதெய்வம். எந்தயொரு நிகழ்வாக இருந்தாலும் மாடனுக்குப் பூசைப் போட்டப்பிறகு தான் தொடங்குவாள் தங்கதாச்சி. ஆடி மாசம் மாடன் கோயிலுக்குத் திருவிழா வந்தது. மாடனுக்குக் கிடா வெட்டும் நிகழ்வு பெரும் சிறப்பாய் நடந்தது. மாடன் கோயில் முன் வாணமும், பட்டாசும் கொளுத்துவர். மாடனுக்கு வெண்பொங்கலில் தயிர், வெல்லம், வாழைப்பழம் வைத்து படையல் போடுவர், கோயில் முழுவதும் சாம்பிராணி புகையிடப்படும், மாடஞ்சிலைக்கு பூ மாலையும் படையல் பொருட்களும் வைத்து படைப்பர் பூசைப் போட்ட எட்டாம் நாளில் அனைவரும் நெய் சேர்த்து வைத்திருந்து கோயிலுக்குச் சென்று ரொட்டி தட்டுவர். களி கிண்டி படைப்பர் இவ்வாறு தங்களின் குலதெய்வத்திற்கு நேர்த்திக் கடனாய் பல்வேறு சடங்கினைச் செய்வர்.

தெக்கத்து முனி

மாணிக்கம் நாவலில் வரும் வடிவேலு பிள்ளை மீன்பிடி தொழிலுக்குச் செல்லும்பொழுது கடலில் மூழ்கி இறந்துவிட்டான். அவனைத் தொடர்ந்து சில நாட்கள் கழித்து பெரியசாமிக்கும் உடல்நிலைச் சரியில்லாமல் மோசமானது. இதனால் பயந்துபோன மீனவர்கள் இதற்கு காரணம் அறியாமல் கலக்கம் அடைந்தனர். குஞ்சிப்பிள்ளை எனும் மீனவர் சாமியாடி இதற்கு காரணம் தெக்கத்து முனிதான் என்று அறிந்துக் கொண்டார். பல வருடமாய் தெக்கத்து முனிக்குப் பூசை போடாமல் இருந்ததால், முனிக்குக் கோபம் வந்து கடலில் தொழிலுக்குச் செல்பவர்களைப் பலி வாங்குகிறது என்று சாமியாடி தெரிந்துக்கொண்டார். உடனே அனைவரும் தெக்கத்தி முனியைக் குளிர வைக்க பூசைப் போடவேண்டும் என முடிவு செய்தனர். கட்டையன்

மேல் முனி ஏறுவார் என்று தெரிந்த குஞ்சிப்பிள்ளை சாமியாடி முனியை வரவைத்தார். முனி அய்யா உன்கோபம் தீர நாங்கள் என்ன செய்யவேண்டும்? பலி கொடுக்க வேண்டுமா? எனக் கேட்டார். அதற்கு தெக்கத்து முனி எனக்கு பலி வேண்டாம் பாபள்ளயம் போடு என்று கூறி மலையேறிவிட்டார். தெக்கத்து முனிக்குக் கிடாவெட்டி பூசை போடுவதே மிகச் சிறப்பான ஒன்றாகும். கிடாவெட்டி இல்லையென்றால் பொங்கலும், பழமும் வைத்து பூசை செய்வர். தெக்கத்து முனியே பாபள்ளயம் வேண்டும் என்று கூறியதால், தை மாதம் முனிக்குப் பாபள்ளயம் பூசைப் போடத் தயாரானர்கள் மீனவர்கள்.

பாபள்ளயம் போடுவதற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டனர். பெரிய பாலப்பழம், வாழைப்பழம், பொரிக்கடலை, போன்றவற்றை எடுத்துக் கொண்டனர். தெற்கத்து முனிக்குப் பூமாலை இட்டனர். கோயிலின் முன் அடுப்பு மூட்டி பச்சரிசி பொங்கல், சர்க்கரைப்பொங்கல் செய்தனர். அதனைப் பெரிய வாழையிலையில் வைத்தனர். ஒரு பெரிய மண் சட்டியில் நெருப்பு இட்டு சாம்பிராணியைப் போட்டு கோயில் திடல் முழுவதும் காட்டினர். முக்கியமாக தெக்கத்து முனிக்குப் பிடித்த சாரயத்தை ஊற்றி படையல் போட்டனர். மீண்டும் முனி கட்டையன் மேல் ஏறிவந்து ஆடினார். இனி யாரையும் பலி வாங்க மாட்டேன் என்று கூறி மலையேறிவிட்டார். இவ்வாறு தங்களுடைய தெய்வங்களுக்குப் பூசைச் செய்யாவிட்டால், அது கோபம் கொண்டு தங்களை அழித்துவிடும் என நம்பப்படுகிறது. இதனால் தெய்வத்தின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க இச்சடங்கு செய்யப்படுகிறது.

மலையாள வீரன்

ஆறுகாட்டுத்துறை நாவலில் சாமுவேல் சமுத்திரவல்லிக்குப் பெண்குழந்தைப் பிறந்ததையெண்ணி மனமுடைந்து கடலுக்குச் செல்கிறான். கடலில் புயல் காற்று வீசியதால் அவனின் கட்டுமரம் சேதமடைகிறது. கடலுக்குச் சென்ற சாமுவேல் பல வருடம் கழித்தும் கரைக்குத் திரும்பவில்லை. இதனால் சமுத்திரவல்லியின் வாழ்க்கைக் கேள்விக்குறியாய் நின்றது. தன் மகளின் வாழ்க்கை வீணாவதைக் கண்டு மனமுடைந்த சிங்காரவேலு நாட்டார் தன் குலதெய்வமான மலையாள வீரனை வேண்டி வெடி வைத்தார். மலையான வீரனுக்கு மிகவும் பிடித்தது வெடி சத்தமாகும். தங்களின் மனக்குறையை நீக்கினால், வீரனுக்கு நேர்த்திக் கடனாய் திருவிழா எடுத்து வெடி வெடிக்கிறேன் என்று வேண்டிக்கொள்வர். அவ்வாறே சிங்காரவேலு நாட்டார் சாமுவேல் உயிருடன் இருக்க வேண்டும். விரைவில் கரை சேர வேண்டும் என வேண்டி வெடி வைத்தார். அன்று இரவே மலையாள வீரன் நாட்டார் கனவில் வந்து, உன் மருமகன் உயிருடன் இருக்கிறான். விரைவில் கரை சேருவான் என்று கூறுகிறார். மலையாள வீரன் கூறியது போலவே சில ஆண்டுகள் கழித்து சாமுவேல் உயிருடன்

கரை வந்து சேர்ந்தான். இவ்வாறு தங்கள் குலதெய்வத்தை வேண்டி நேர்த்திக்கடன் சடங்கினைச் செய்தால் விரைவில் துன்பம் அகலும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

அய்யனார்

அய்யனார் கோயில்கள் திறந்த வெளியில் பெரும்பாலும் கண்மாயக் கரைகளில் நீர்நிலையை ஒட்டியுள்ள பகுதிகளில் வயல் வெளிகளில் ஆலமர நிழலில் கிழக்குப் பார்த்த வாசலுடன் அமைந்திருக்கும். வெள்ளைக் குதிரை வேட்ட நாய், வீரர்கள் புடைச்சூழ அய்யனார் சிலை இருப்பதும் அதனைச் சுற்றித் துப்பாக்கி ஏந்திய போலீஸ், சிப்பாய்கள் நிற்பதும், நாய், பூதங்கள் போன்ற பல உருவங்கள் இருப்பதும் பார்ப்போரை மிளரச் செய்யும். ஊர் எல்லையில் காவல் தெய்வமாகவும் அய்யனார் சிலை அமைந்திருக்கும். அய்யனார் திடலுக்குள் பெண்கள் யாரும் செல்லமாட்டார்கள். ஆண்களுமே கூட நண்பகல், இரவு நேரங்களில் செல்ல பயப்படுவர். அதற்குக் காரணம் அய்யனார் கோபக்காரத் தெய்வம் என்பதால், வேட்டைக்குச் செல்லும் பொழுது எதிரில் வருபவர்களைப் பலி வாங்கிவிடும் என நம்பப்படுகிறது.

பொன்னாச்சரம் நாவலில் அய்யனாருக்கு ஆடி மாதம் பூசை செய்யப்படுகிறது. அய்யனாரப்பனைக் குலதெய்வமாகக் கொண்டுள்ள குடும்பங்கள் ஆடி மாதத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமையில் கிடாவெட்டி, புதுபானையில் பொங்கலிட்டு படையல் போடுகின்றனர். தங்கள் குடும்பங்களின் சுப நிகழ்ச்சிகளுக்கு எவ்வித இடர்பாடும் வராமல் இருக்க பலி கொடுக்கும் சடங்கினைச் செய்கின்றனர்.

துணைமைத் தெய்வங்கள்

தலைமைத் தெய்வங்களுக்குத் துணையாகவே தனித்த நிலையில் சிறிய அளவிலோ, வழிபாட்டிற்கு உட்படுத்தப்படும் தெய்வங்களே 'துணைமைத் தெய்வங்கள்' என்று கூறுவர். இவை பரிவாரத் தெய்வங்கள் என்றும் குறிப்பிடுவர். இந்தத் துணைமைத் தெய்வங்களுக்கு என்று தனிப்பட்ட வழிபாடு கிடையாது. ஆனால் கோயிலுக்குள் நுழைவோர் முதன்மைத் தெய்வங்களை மட்டுமல்லாது பரிவாரத் தெய்வங்களையும் வணங்கி விட்டே வெளியே வரும் வழக்கம் கொண்டுள்ளனர். இவை பெரும்பாலும் குலதெய்வங்களாகவோ, இனத்தெய்வங்களாகவோ அமையும், பெருந்தெய்வ வழிபாட்டிலும் இப்பரிவாரத் தெய்வங்களைக் காண முடியும். இவை ஆண்தெய்வங்களாகவோ, பெண்தெய்வங்களாகவோ அமையும். முதன்மைத் தெய்வங்கள் ஊர்க்காவலுக்கும், வேட்டைக்கும் செல்லும்போது பரிவாரத் தெய்வங்கள் உடன் செல்வதாகக் கூறப்படுகின்றது.

சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் முதன்மைத் தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளதைப் போலவே துணைமைத் தெய்வங்களையும் குறிப்பிட்டுள்ளார். அளம் நாவலில் வரும் முதன்மைத் தெய்வமான நொண்டி வீரனுக்குத் துணைமைத் தெய்வங்களாக ஆவுத்திக்காத்தானும், பெத்தானும் அமைகின்றன. மாணிக்கம் நாவலில் வரும் முதன்மைத் தெய்வமான மாடஞ்சாமிக்குத் துணைமைத் தெய்வங்களாகச் சின்னுவும், சாம்பானும் அமைகின்றன. மற்றொரு முதன்மைத் தெய்வமான ஐயனாருக்குத் துணைமைத் தெய்வங்களாக தூண்டிக்காரன், மின்னடியான் சிலைகள் பெரிய அளவில் வைக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

சமயம் என்பது இறைவழிபாட்டுடன் தொடர்புடையதாகும். சமயமும், சமுதாயமும், இறையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவனவாகும். மனிதனின் பண்பட்ட உள்ளத்தினை அறிந்து கொள்ள வேண்டுமானால், அவனது இறை உணர்வினை அறிய வேண்டும். கோயில் என்பது நம் மரபில் மக்கள் சென்று இறைவனை வணங்கும் கட்டடம் மட்டுமல்ல பல உணர்வுகளும், எண்ணங்களும், சடங்குகளும் பின்னிப் பினைந்தவையாகும்.

இந்நிலையில் பண்பாட்டில் மிகப் பழங்காலத்தொட்டே நாட்டுப்புற மக்களால் சிறு தெய்வ வழிபாடும், அதற்கான சடங்கு முறைகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. மனித இன வரலாற்றில் விவசாயக்காலம் முதற்கொண்டு இவ்வழிபாடும், சடங்கு முறைகளும் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இயற்கை வழிபாட்டில் ஆரம்பித்த வழிபாடு காலப்போக்கில் சிறுதெய்வ வழிபாடாக மலர்ந்து அதற்கான சடங்கு முறையால் மக்கள் மனதில் நிலைப்பெற்றுவிட்டது.

துணைநூற்பட்டியல்

1. தமிழ் இலக்கிய வரலாறு - சிற்பி பாலசுப்பிரமணியன், கவிதா பதிப்பகம், சென்னை.
2. மாணிக்கம் - சு. தமிழ்ச்செல்வி, நியூ செஞ்சுரி, புக் ஹவுஸ் (பி)லிட். சென்னை.
3. ஆறுகாட்டுத்துறை - சு. தமிழ்ச்செல்வி, நியூ செஞ்சுரி, புக் ஹவுஸ் (பி)லிட். சென்னை.
4. அளம் - சு. தமிழ்ச்செல்வி, நியூ செஞ்சுரி, புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை.
5. பொன்னாச்சரம் - சு. தமிழ்ச்செல்வி, உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி.

REFERENCES

1. Tamil ilakkiya varalaru - Sirpi Balasubramaniyan, Kavitha Pathippagam, Chennai.
2. Manikkam - Su. Tamilselvi New Century Book House (P) LTD Chennai
3. Arugattudurai - Su. Tamilselvi New Century Book House (P) LTD Chennai
4. Alam -Su. Tamilselvi, New Century Book House (P) LTD Chennai
5. Ponnacharam - Su. Tamilselvi, Uyir Ezhuthu Pathippagam, Chennai.